## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 06.06.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

அல்லாஹ்வின் ஒரு பண்புப் பெயர் **ரஸ்ஸாக்** ஆகும். இந்த பண்புப் பெயருக்கு அகராதி வல்லுநர்கள் பல்வேறு பொருள்களைத் தந்துள்ளார்கள். அல்லாமா ஜலாலுத்தீன் முஹம்மது அவர்கள் தமது லிஸானுல் அரப் என்ற அகராதியில் **ராஸிக், ரஸ்ஸாக்** ஆகிய சொற்களுக்கு விளக்கமளித்தவாறு இது அல்லாஹ்வின் பண்பாகும். ஏனென்றால், அவனே எல்லாப் படைப்பினங்களுக்கும் ரிஸ்கை வழங்கியுள்ளான் என்று எழுதியுள்ளார்கள். அவனே படைப்பினங்களுக்கு வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான ரிஸ்கை வழங்குகின்றான் என்றும் எழுதியுள்ளார்கள்.

அக்ரபுல் மவாரித் என்ற அகராதி நூலில் **ரஸ்ஸாக்** என்ற சொல்லுக்கு விளக்கமளித்தவாறு **ரஸ்ஸாக்** என்ற சொல் அல்லாஹ்வுக்கு மட்டுமே பயன்படுத்தப் படும். அல்லாஹ் அல்லாதவற்றிற்கு இந்த சொல் பயன்படுத்தப்படுவதில்லை என்று எழுதப்பட்டுள்ளது. இமாம் ராகிப் அவர்களின் முஃப்ரதாத் என்னும் நூலில் **ரஸ்ஸாக்** என்ற சொல் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொல்லப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. பொதுவாக இமாம் ராகிப் அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களின் ஒளியிலேயே அகராதிப் பொருள்களைக் கூறுவார்கள். **ரஸ்ஸாக்** என்ற சொல் அல்லாஹ்வை மட்டுமே குறிக்கும் என்பதையே இவர்களும் கூறியுள்ளார்கள். இந்த சொல்லுக்கு பல்வேறு அகராதி வல்லுநர்கள் பொருள் கொடுத்துள்ளார்கள். உர்துவிலும், பஞ்சாபிலும் **ரிஸ்க்** என்ற சொல் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட பொருளில்தான் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இதற்கு மிக விரிவான பொருள் இருக்கின்றது. **ரிஸ்க்** என்ற சொல்லுக்கு இமாம் ராகிப் அவர்கள் மூன்று பொருள்களைக் கூறியுள்ளார்கள். முதலாவதாக, தொடராக கிடைக்கின்ற கொடைக்கு **ரிஸ்க்** என்று கூறப்படும். அது உலக அருட்கொடையாக இருந்தாலும் சரியே. அல்லது ஆன்மீக அருட்கொடையாக இருந்தாலும் சரியே. சில நேரங்களில் பங்கு என்ற பொருளிலும் **ரிஸ்க்** என்ற சொல் பயன்படுத்ததப்படுகிறது. அந்த பங்கு நல்லதாகவும் இருக்கலாம். தீயதாகவும் இருக்கலாம். மூன்றாவதாக உணவுப் பொருள்களுக்கும் **ரிஸ்க்** என்று கூறப்படுகிறது. அந்த அளவு உணவு வயிற்றில் சென்று சத்தாக மாறுகிறது. லிஸானுல் அரப் என்ற அகராதி பொருளின்படி எந்த பொருளிலிருந்து பயன் கிடைக்கின்றதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் **ரிஸ்க்** என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. **வழங்குதல்** என்ற பொருளும் இதற்கு உண்டு. மழையையும் **ரிஸ்க்** என்று கூறுவார்கள். அக்ரபுல் மவாரித் என்ற அகராதி நூலில் எந்தப் பொருளிலிருந்து பயன் கிடைக்கின்றதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் **ரிஸ்க்** என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது.

இப்போது திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் **ரிஸ்க்** என்ற சொல்லை அல்லாஹ் எவ்வாறு எடுத்துக் கூறியுள்ளான்? என்பதை நான் சில வசனங்களின் மூலம் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன்.

அல்லாஹ் சூரா ஹூத் –ல் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَا مِنْ دَآبَّةٍ فِي الْأَرْضِ إِلَّا عَلَى اللّٰهِ رِزْقُهَا وَيَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا ۚ كُلٌّ فِي كِتٰبٍ مُّبِيْنٍ ۝

பூமியில் நடமாடுகின்ற எல்லா உயிரினத்திற்கும் உணவு அளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. மேலும் அதன் தற்காலிகமானதும், நிரந்தரமானதுமான தங்கும் இடத்தை அவன் அறிகின்றான். (இவை) எல்லாம் தெளிவான ஒரு நூலில் (பதிவாகி) உள்ளன. (11 : 7)

இந்த உலகில் இருக்கின்ற ஒவ்வொரு உயிரினத்திற்கும் அல்லாஹ்தான் **ரிஸ்க்** -ற்கான ஏற்பாட்டை செய்கின்றான் என்பதை அல்லாஹ் இந்த வசனத்தில் அறிவித்துள்ளான். ஒவ்வொரு பறவையும், கால்நடையும், சிறு சிறு கிருமிகளும் ஆகிய இவை அனைத்திற்கும் அல்லாஹ்தான் உணவிற்கான ஏற்பாட்டை செய்கின்றான். பூமியில் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான கிருமிகள் இருக்கின்றன. அல்லாஹ் அவற்றில் ஒவ்வொன்றிற்கும் இந்த பூமிக்குள் இருந்தே உணவிற்கான ஏற்பாட்டை செய்துள்ளான். ஆய்வின் அடிப்படையில் பல கிருமிகள் பற்றி மனிதன் அறிந்துள்ளான். இன்னும் பல கிருமிகள் தொடர்பாக மனிதனுக்கு இதுவரை தெரியாமல் இருக்கின்றது. அவற்றிற்கெல்லாம் அல்லாஹ்வே உணவிற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். எப்படி அல்லாஹ் அந்த கிருமிகளுக்கு உணவிற்கான ஏற்பாட்டை செய்துள்ளான் என்பது மனிதனுக்குத் தெரியாது.

பிறகு மனிதன் தானியங்களுக்கான விதைகளை விதைக்கின்றான். பிறகு அந்த தானியங்களின் ஒரு பகுதியை மனிதன் தனது உணவிற்காக பயன்படுத்துகின்றான். இன்னொரு பகுதி மற்ற விலங்குகளுக்கு பயனளிக்கின்றது. சுருக்கமாக, ஒவ்வொருவருக்கும் உணவிற்கான ஏற்பாட்டை செய்பவன் இறைவனேயாவான். பௌதீக **ரிஸ்க்** மற்றுமின்றி உலகம், மறுமை ஆகியவற்றுடன் தொடர்புடைய எல்லாவகையான (அருட்)கொடைக்கும் **ரிஸ்க்** என்றே கூறப்படுகின்றது. மறுமையில் கிடைக்கும் **ரிஸ்க்** மனிதனுக்கு மட்டுமே கிடைக்கின்றது. ஏனென்றால், அவன் சிறந்த படைப்பினமாக இருக்கின்றான். மறுமையில் கிடைக்கும் **ரிஸ்க்** -ற்கு ஆன்மீகத்துடன் தொடர்பு இருக்கின்றது. அதன் அடித்தளம் ஆன்மீகத்தில்தான் இருக்கின்றது. அதற்காக மனிதன் நற்செயல்களைச் செய்கின்றான். அந்த நற்செயலுக்கான நற்கூலி இவ்வுலகிலும் மனிதனுக்குக் கிடைக்கின்றது. மறு உலகிலும் கிடைக்கும். மறுமையில் கிடைக்கும் அந்த **ரிஸ்க்** -ற்கான பொருள்களையும் வழிவகைகளையும் அல்லாஹ் இவ்வுலகில் நமக்கு வழங்கியுள்ளான். ஆன்மீக வளர்ச்சிக்கு காரணமாக அமையும் அந்த **ரிஸ்க்** -ஐயும் அல்லாஹ் இவ்வுலகில் நமக்கு வழங்குகின்றான். அதற்காகவே நபிமார்கள் இவ்வுலகில் வருகின்றார்கள். அதன் மூலம் அவர்கள் அந்த ஆன்மீக **ரிஸ்க்** ஐ படைப்பினங்களுக்கு வழங்கிக் கொண்டேயிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இறைவன் எப்படிப்பட்ட சிறந்த ஆன்மீக உணவை நமக்கு வழங்கியுள்ளான் என்றால் அது எப்போதும் நிரந்தரமாக இருக்கும். அது கெட்டுப்போகாது. அது முடிந்து விடும் அபாயத்திலும் இல்லை.

இந்த வசனத்தில் **ரிஸ்க்** ஐப்பற்றி விளக்குவதற்கு முன்னால் அல்லாஹ் இறைவணக்கம், நற்செயல்கள் ஆகியவற்றின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளான். மேலும் இறைவன் பக்கமே நீங்கள் திரும்ப வேண்டியது வரும் என்பதை தெளிவாகக் கூறி விட்டான். இந்த உலகில் சிறந்த ஆன்மீக **ரிஸ்க்** ஐப் பெற்றுக் கொண்டவர்கள் அதன் உயர்வான தரத்தை நற்செயல்களைச் செய்வதன் மூலம் அடைவார்கள். பௌதீக **ரிஸ்க்** -ஐயும், எல்லா உயிரினங்களையும் உதாரணமாக எடுத்துக் கூறியிருப்பது தெரிவிப்பது என்னவென்றால், பௌதீக **ரிஸ்க்** ஐப் பெற்றுள்ள இவர்கள் அல்லாஹ் தான் உண்மையில் **ரிஸ்க்** வழங்குபவன் என்பதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இந்த தற்காலிக வாழ்க்கைக்காக அல்லாஹ் தனது படைப்பினங்களுடன் இந்த அளவு கருணையுடன் நடந்து கொள்ளும்போது நிரந்தரமான வாழ்க்கைக்காக தேவையான **ரிஸ்க்** -ற்கான ஏற்பாட்டை அவன் எப்படி செய்யாமல் விட்டு விடுவான். எனவே அல்லாஹ்வை வணங்குவதும், நற்செயல்களும் நிரந்தரமான வாழ்க்கைக்குத் தேவையான **ரிஸ்க்** ஆகும். சிறந்த படைப்பினமாக இருக்கும் மனிதனிடம் மட்டும்தான் நிரந்தரமான இறுதி வாழ்விற்கான வாக்குறுதி வழங்கப்பட்டிருப்பதால் இதன் காரணமாக மனிதன் தனது ஆன்மீகத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இதைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை ஒரு நம்பிக்கையாளருக்கு திருக்குர்ஆன் தெளிவாகக் கூறியிருக்கின்றது.

தரத்தின் அடிப்படையிலும், அளவின் அடிப்படையிலும், எண்ணிக்கையின் அடிப்படையிலும் இந்த **ரிஸ்க்** அமையும். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு இந்த **ரிஸ்க்** ஐ வழங்கியுள்ளான். திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் உங்களுக்காக இறங்கியுள்ள இந்த ஆன்மீக **ரிஸ்க்** –ற்கு மதிப்பளியுங்கள். அதற்கு கண்ணியமளிக்காத நிலையில் வரம்பை மீறுதலும் ஏற்படும்போது சில நேரங்களில் இவ்வுலகிலேயே மனிதன் பௌதீக **ரிஸ்க்** –லிருந்து புறக்கணிக்கப்பட்டு விடுகின்றான்.

அல்லாஹ் இந்த கருத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்.

அல்லாஹ் ஒரு ஊரை எடுத்துக்காட்டாக கூறி விளக்குகின்றான். அது மிகவும் அமைதியாகவும், அச்சமற்றதாகவும் இருந்தது. அதற்குரிய உணவு எல்லா இடத்திலிருந்தும் தாராளமாக அதற்குக் கிடைத்தது. பிறகு அவ்வூரில் வசித்தவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த மறுத்தனர். எனவே, அவர்களின் செயல்களின் காரணமாக அல்லாஹ் அவர்களுக்கு பசி, பயம் ஆகியவற்றின் சுவையைச் சுவைத்துப் பார்க்குமாறு செய்தான். (16:113)

இங்கு உதாரணமாக கூறப்பட்ட ஊர் மக்காவாகும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த நகரத்திற்குத் தேவையான உணவை வழங்குமாறு அல்லாஹ்விடம் துஆ செய்திருந்தும் அல்லாஹ் அதற்கான வாக்குறுதியை அவர்களுக்கு வழங்கிய பின்னரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மறுத்ததன் காரணமாக அங்குள்ள மக்கள் மீது பசி மற்றும் வறட்சியின் நாட்கள் வந்தன. ஒரு சமயத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட பசியால் அவர்கள் அமைதியிழந்தனர். எதுவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு மத்தியில் வாழ்ந்தார்களோ அவர்களின் நிலை இவ்வாறு இருக்கவில்லை. எல்லா தரப்பிலிருந்தும் **ரிஸ்க்** மக்காவிற்கு வந்து கொண்டேயிருந்தது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஒரு முறை மக்காவில் எத்தகைய பஞ்சம் நிலவியது என்றால், எல்லாரது வாழ்வும் கேள்விக்குறியாக ஆகி விட்டது. இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடிய எதிரியாக இருந்த அபூஸுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்க மதீனா வந்தார். மிகுந்த தயவுடன் எங்களது இந்த பசி, வறுமை, பஞ்சம், அச்சம் ஆகிய நிலைமைகளை அல்லாஹ் முடிவுக்குக் கொண்டு வர நீங்கள் எங்களுக்காக அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள் என்று அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வேண்டினார். உங்களது சகோதரர்களுக்காக உங்கள் அனுதாபம் இல்லையா? இவ்வாறே பசியிலும் அச்சத்தின் நிலைமையிலும் அவர்கள் மரணித்துப் போக நீங்கள் விட்டு விடுவீர்களா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து அவர் கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ மனித இனத்தின் மீது அருள் செய்பவர்களாக இருந்தார்கள். அன்பு மற்றும் அனுதாபம் காட்டுதல் ஆகியவற்றின் வடிவமாக அன்னார் திகழ்ந்தார்கள். நீங்கள் எங்களது எதிரிகள். நீங்கள் எந்த அளவு கொடூரமாக முஸ்லிம்கள் மீது அநீதியிழைத்துள்ளீர்கள் என்றால், அதற்காக நீங்கள் இந்த தண்டனையைப் பெற வேண்டும். உங்களிடம் இப்படிப்பட்ட தண்டனையைத் தான் பரிமாற வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறவில்லை. மாறாக, அவர்களது மென்மையான உள்ளம் உடனடியாக மக்காவாசிகளுக்காக அனுதாப உணர்வுகளால் நிரம்பி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களது பஞ்சத்தின் நிலைமை முடிவுக்கு வருவதற்காக துஆ செய்தார்கள். அல்லாஹ்வும் அருள் செய்தான். அந்த நிலைமைகள் மாறியது.

எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் உண்மையாளர் என்பதை அறிந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் துஆவிற்காக அவர்கள் விண்ணப்பித்தது இதற்கு சான்றாக இருக்கின்றது. எந்த ஆன்மீக **ரிஸ்க்** ற்கான ஏற்பாட்டை செய்வதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாதம் புரிந்தார்களோ அவர்களுடன்தான் நமது பௌதீக **ரிஸ்க்** ற்கும் தொடர்பு இருக்கின்றது என்பதை எதிரிகள் அறிந்திருந்தனர். அவ்வாறிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்ப்பதிலிருந்தும் அவர்கள் விலகவில்லை. அந்த எதிர்ப்பில் அவர்கள் முன்னேறிக் கொண்டே சென்றனர். எதுவரையென்றால், அல்லாஹ் மக்கா வெற்றிக்கான வழிவகைகளை செய்தான். இறுதியில் எல்லா எதிரிகளும் அவர்களது காலடியில் விழும் நிலை வந்தது.

இன்றைய காலக்கட்டத்திலும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருக்கின்றது. பொருட்களின் விலை மிகவும் அதிகமாக இருக்கின்றது என்ற கூச்சல் இருந்து வருகிறது. இதேப் போன்ற நிலைமை முன்புள்ள காலங்களில் ஏற்பட்டிருக்கும்போது இப்போதும் அதே நிலைமை ஏற்பட முடியாதா? ஆன்மீக **ரிஸ்க்** -ன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்ததன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகியிருக்கின்றதா? என்பதை உலகம் கவனமாக சிந்தனை செய்ய வேண்டும். இந்த காலத்தில் உலகின் மிகப்பெரிய சக்தியாக அமெரிக்கா கருதப்படுகிறது. பொருளாதார ரீதியிலும் மிக வலுவான சக்தியாக அது கருதப்படுகிறது. அங்கும் இப்போது உணவுப் பொருட்களின் குறைவு, சமூக சீர்குலைவு ஆகியவற்றின் கூச்சல் எழுந்துள்ளது. அதை அவர்களல் சீர்செய்ய முடியவில்லை. அங்கும் விலையேற்றம் தொடர்பான கூச்சல் எழுந்துள்ளது. உணவுக்கான புதிய புதிய தானியங்கள் அங்கு வந்த பிறகும், இன்றிலிருந்து 50 வருடங்களுக்கு முன்பு இருந்த தானியங்களை விட தானியங்களின் உற்பத்தி 10 மடங்கு அதிகமாகியிருந்தும் கூட அமெரிக்கா உட்பட உலகின் பல பகுதிகளிலும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருந்து வருகிறது. சில இடங்களில் போதுமான அளவு அரிசி இல்லை என்று கூறப்படுகிறது. மற்ற பொருட்களின் விலை ஏறி விட்டது என்ற கூச்சல் இருந்து வருகிறது. இப்படியெல்லாம் ஏன் நிகழ்ந்துள்ளது என்றால், இறைவனிடமிருந்து தண்ணீர் பொழியப்படாமல் இருந்தால் தானியங்கள் உற்பத்தியாகாது. உலகம் அல்லாஹ்வை விட்டு விலகிச் செல்லும் போது, அல்லாஹ்வுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட ஆரம்பிக்கும்போது இப்படிப்பட்ட தாக்குதல்கள் ஏற்படுகின்றன. உணவளிக்கும் **ரஸ்ஸாக்** அல்லாஹ்வேயாவான் என்பது ஒரு முஸ்லிமுக்கு திருக்குர்ஆனில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவன் பக்கம் கவனம் செலுத்துவது உங்களது உலகம், மறுமை ஆகியவற்றின் **ரிஸ்க்** அதிகரிக்கக் காரணமாக அமைவதுடன், ஒவ்வொரு பௌதீகத் தேவையையும் நிறைவு செய்யக்கூடியதாக அது இருக்கும்.

ஓரிடத்தில் தான் **ரஸ்ஸாக்** ஆக இருப்பதை சுட்டிக்காட்டியவாறு அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

**வகய்யிம்மின் தாப்பத்தில் லா தஹ்மிலு ரிஸ்கஹா. அல்லாஹு யர்ஸுகுஹா வஇய்யாக்கும் வஹுவ சமீவுல் அலீம்.**

பூமியில் நடமாடுகின்ற எத்தனையோ உயிரினங்கள் தங்கள் **ரிஸ்க்** ஐ சுமந்து திரிவதில்லை. அல்லாஹ்வே அவற்றிற்கும் உங்களுக்கும் **ரிஸ்க்** ஐ வழங்குகின்றான். அவன் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (29 : 61)

நற்செயல்களை செய்பவர்களும் மார்க்கத்தில் நிலைத்து நிற்பவர்களும் அவர்களுக்கு எப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டாலும் அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் உறுதியாக நிலைநிற்பதுடன் அல்லாஹ் கூறியுள்ள கட்டளைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும் என்பதை எப்போதும் அவர்கள் நினைவில் வைக்க வேண்டும் என்பதை அல்லாஹ் இந்த வசனங்களில் கூறியுள்ளான். நாங்கள் உலகவாதிகள் கூறுவதை கேட்காவிட்டால் பெரும் பெரும் மனிதர்களையும் அரசாங்கங்களையும் பின்பற்றிச் செல்லாமல் இருந்தால்

நமது **ரிஸ்க்** –ன் கதவுகள் அடைபட்டு விடும் என்று ஒருபோதும் ஒரு மூஃமின் கருதக் கூடாது. அவர் எப்போதும் இறைவனை நினைவு கூற வேண்டும். எந்த சமயத்திலும் ஒரு மூஃமின் பலவீனத்தை வெளிப்படுத்தக்கூடாது. எவர்களோடு எனது **ரிஸ்க்** –ற்கு தொடர்பு இருக்கின்றதோ அவர்கள் கூறுவதற்கெல்லாம் நான் ஆமாம் போடவில்லையென்றால், எனது தொழிலிருந்தும், **ரிஸ்க்** –லிருந்தும் நான் கை கழுவ வேண்டியது வரும் என்ற அச்சம் ஒருபோதும் ஒரு மூஃமினுக்கு வரக்கூடாது. சமுதாய அளவில் பார்ப்பதாயிருந்தால், நமது வியாபாரம் இப்போது இந்த நாட்டுடன் தொடர்புடையதாக இருப்பதால் அல்லது நமக்கு கிடைக்கவிருக்கும் பல பலன்களும் இந்த நாட்டுடன் தொடர்புடையதாக இருப்பதால் மற்றவர்களுக்காக முஸ்லிம்கள், முஸ்லிம் அரசாங்கத்தையே ஏமாற்றலாம் என்ற அளவில் இந்த அச்சம் முஸ்லிம்களை பற்றிக் கொள்வது சரியல்ல என்பதையும், மார்க்கத்தனமான உணர்வை வெளிப்படுத்தியவாறு தனிப்பட்ட முறையிலும் நாட்டளவிலும் நம்பிக்கையாளர்கள் ஒருபோதும் மற்றவர்களது தாக்கத்திற்கு ஆளாகக் கூடாது என்பதை அல்லாஹ் தெளிவாகக் கூறியுள்ளான். நமது **ரிஸ்க்** இந்த இடத்துடன் அல்லது இந்த நாட்டுடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்ற அச்சம் உங்களுக்கு இருக்கக் கூடாது.

அல்லாஹ் தனது அடியார்களுக்கும் தனது மார்க்கத்தின்மீது தன்மான உணர்வு கொண்டவர்களுக்கு நம்பிக்கையாளர்களுக்கும் தானே **ரிஸ்க்** –ற்கான ஏற்பாட்டைச் செய்கின்றானென்றால் பிறகு நம்பிக்கையாளர்களுக்கான **ரிஸ்க்** –ற்கான ஏற்பாட்டை அவன் எப்படி செய்யாமல் இருப்பான்?

அல்லாஹ் வானம், பூமி ஆகியவற்றின் எஜமானனாவான். அவன் சூரியனையும், சந்திரனையும் தனது படைப்பினங்களுக்குத் தொண்டு செய்வதற்காக வைத்துள்ளான். அப்படிப்பட்டவனுக்கு தனது தூய அடியார்களுக்கு **ரிஸ்க்** –ற்கான வழிவகைகளை செய்வதற்கான ஆற்றல் இல்லையா? எனவே, **அல்லாஹு யப்ஸிதுர்ரிஸ்க லிமன் ய–ஷாவு வயக்திரு லஹு** – அல்லாஹ்வே தனது அடியார்களில் தான் விரும்புவருக்கு ரிஸ்கை தாராளமாக வழங்குகின்றான். தான் விரும்புபவருக்கு அவற்றை குறைவாக கொடுக்கின்றான்.

எனவே, உங்களது **ரிஸ்க்** –ற்கான வழிவகைகளுக்காக உலகத்தை மட்டும் சார்ந்து நிற்க வேண்டாம். **ரிஸ்க்** வழங்குவதும், அதை தடை செய்வதும் அல்லாஹ்வுடன் தொடர்புடைய ஒன்றாகும். எவர்கள் உலக வழிகளைச் சார்ந்து நிற்கின்றார்களோ அவர்களது நிலையை இன்று உலகம் பார்க்கின்றது. இந்த பணக்கார நாடுகளில் வாழ்பவர்களும் **ரிஸ்க்** –ல் குறைவு ஏற்பட்டுள்ளதாக கூச்சலிட ஆரம்பித்துள்ளார்கள். எப்போதும் அல்லாஹ்வின் திருப்தி எதில் இருக்கின்றது? என்பதன் பக்கம் ஒரு நம்பிக்கையாளரின் கவனம் இருக்க வேண்டும். தூய்மையான உள்ளத்துடன் ஒருவர் அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்தியவாறு அவனை வணங்குவதாக இருந்தால், அவனது ஆன்மீக **ரிஸ்க்** –லிருந்தும் அருள்களைப் பெற முயற்சி செய்து கொண்டிருந்தால் பிறகு அப்படிப்பட்டவருக்கு எந்த கவலையும் இருக்காது. அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் உலகத் தேவைகளையும் நிறைவேற்றுகின்றான். போதுமென்ற மனதைக் கொண்டவராக அவர் இருக்க வேண்டும்.

எனவே, உண்மையான **ராஸிக்** ஆக இருக்கும் இறைவன் பக்கம் ஒரு நம்பிக்கையாளரின் கவனம் இருக்க வேண்டும். மனிதர்களின் பக்கம் அவர்களது கவனம் இருக்கக் கூடாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் வரம்பு மீறிச் செயல்பட்டுக் காரணிகள் மீது மட்டும் நம்பிக்கை வைத்து எல்லாவற்றிற்கும் காரணிகளை மட்டும் சார்ந்து நிற்பதாயிருந்தால் இது மனிதனை அவனது அசல் நோக்கத்திலிருந்தும்

தொலைவில் எறிந்துவிடும் **ஷிர்க்** ஆகும். உதாரணமாக, இந்த காரணம் இல்லாமலிருந்தால் நான் பசியால் மரணித்திருப்பேன் அல்லது இந்த பணி நடக்காமலிருந்தால் எனது நிலை மோசமானதாக ஆகியிருக்கும் அல்லது எனது இந்த நண்பன் இல்லாமலிருந்தால் எனக்கு துன்பம் நேர்ந்திருக்கும் என்று ஒருவர் கூறுவதாய் இருந்தால் இந்த எல்லா வி-யங்களும் எப்படிப்பட்டதென்றால் இறைவன் இவற்றை விரும்பமாட்டான். சொத்த அல்லது இதர காரணிகள் மீது இறைவனை விட்டும் முற்றிலும் தூர விலகிச் செல்லும் அளவில் நம்பிக்கை வைப்பதை இறைவன் விரும்பமாட்டான். இது அபாயகரமான **ஷிர்க்** ஆகும். மேலும் இது திருக்குர்ஆனின் போதனைகளுக்கு முற்றிலும் மாற்றமான வி-யமாகும். இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். **வ ஃபிஸ்ஸமாயி ரிஸ்குகும் வமா தூஅதூன்** - உங்களுக்குரிய உணவும் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டவையும் வானத்தில் இருக்கின்றன. (51 : 23)

**வமய் யதவக்கல் அலல்லாஹி ஃபஹுவ ஹஸ்புஹு** - அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். (65 : 4)

மேலும் கூறுகின்றான். **வமய் யத்தகில்லாஹ யஜ்அல்லஹு மஹ்ரஜன். வ யர்ஸுகுஹு மின் ஹய்ஸி லா யஹ்தஸிப்** - அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். (65 : 3,4)

மேலும் கூறுகின்றான். **வஹுவ யதவல்லஸ் ஸாலிஹீன்** - அவன் நல்லவர்களுக்கு உதவி செய்கிறான். (7 : 197)

திருக்குர்ஆன் இப்படிப்பட்ட வசனங்களால் நிரம்பியுள்ளது. அல்லாஹ் நம்பிக்கையாளர்களை பாதுகாப்பவனாகவும் அவர்களுக்கு போதுமானவனாகவும் இருக்கின்றான். அவ்வாறிருந்தும் மனிதன் காரணிகளைச் சார்ந்து நின்று அவற்றின் மீது மட்டும் நம்பிக்கை வைப்பதாக இருந்தால் அப்படிப்பட்டவர் இறைவனின் இந்த பண்புகளை மறுக்கின்றார். இந்த காரணிகளுக்கு இறைவனின் இடத்தை வழங்கி தனக்கென்று இன்னொரு இறைவனை அவர் ஏற்படுத்திக் கொள்கின்றார். ஏனென்றால், இப்படிப்பட்டவர் ஒரு பக்கம் சாய்கின்றார். இதனால் அவர் **ஷிர்க்** (இணைவைத்தல்) -ன் பக்கம் அடியெடுத்து வைக்கின்றார். எவர்கள் அரசை ஆள்பவர்களின் பக்கம் சாய்ந்து அவர்களிடமிருந்து பரிசை அல்லது பட்டத்தைப் பெற்றுக் கொள்கின்றார்களோ அவர்களது உள்ளத்தில் அரசை ஆள்பவர்களது மகத்துவம் இறைவனது மகத்துவம் போன்று நுழைந்து விடுகின்றது. இதனால் அவர்கள் அவர்களை வணங்க ஆரம்பித்து விடுகின்றார்கள். இந்த வி-யம்தான் ஏகத்துவத்தை வீழ்ச்சியடையச் செய்கின்றது. மனிதனை அவனது உண்மையான இடத்திலிருந்து அகற்றி தொலைவில் எறிந்து விடுகின்றது. எனவே, காரணிகளுக்கும் ஏகத்துவத்திற்கும் இடையில் எவ்வித மோதலும் வரக்கூடாது என்பதையே நபிமார்கள் போதித்துள்ளனர். மாறாக, அவற்றில் ஒவ்வொன்றும் அவற்றிற்குரிய இடத்தில் இருக்க வேண்டும். எல்லா கண்ணியத்திற்கும், எல்லா சுகத்திற்கும், எல்லா தேவைகளுக்கும் போதுமானவனாக இறைவன் இருக்கின்றான் என்பதையே நபிமார்கள் கற்றுத்தர விரும்புகின்றார்கள். எனவே, இதற்கெதிரில் வேறு எவரையாவது மனிதன் சார்ந்து நிற்பதாயிருந்தால் பிறகு இரண்டு எதிர்மறை அம்சங்களின் மோதல்களின் விளைவாக அவற்றில் ஒன்று அழிந்துவிடும் என்பது தெளிவாகி விடும். எனவே, இறைவனின் ஏகத்துவத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். காரணிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அவற்றை இறைவனாக ஆக்கக் கூடாது. இழப்பும், லாபமும அந்த இறைவனின் கைகளில்தான் இருக்கின்றது என்று மனிதன் கருதுகின்ற இத்தகு ஏகத்துவத்தின் மூலமே இறைவனுடன் அவனுக்கு அன்பு ஏற்படுகின்றது. உண்மையாகவே அருள் செய்பவன் அவனேயாவான்.

ஒவ்வொரு அணுக்களும் அவனிடமிருந்தே தோன்றின. வேறு எவரும் இடையில் வர முடியாது. மனிதன் இப்படிப்பட்ட நிலையைப் பெற்று விட்டால் அவன் ஏகத்துவவாதியாக ஆகி விடுகின்றான்.

சுருக்கமாக, கற்களையும், மனிதர்களையும், வேறு பொருள்களையும் இறைவனாக ஆக்காமல் இருப்பதும், இவற்றை இறைவனாக ஆக்குவதிலிருந்து விலகி நிற்பதை வெளிப்படுத்திக் காட்டுவதும் தவ்ஹீதின் ஒரு நிலையாகும். காரணிகளைப் பயன்படுத்திக் கொள்வதும் தவ்ஹீதின் இரண்டாம் நிலையாகும்.

அதாவது வெளிப்படையன காரணிகளை பயன்படுத்தினாலும் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை இருக்க வேண்டும். அல்லாஹ்வையே **ரஸ்ஸாக்** ஆக கருத வேண்டும். இவையே அடிப்படை வி-யங்களாகும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:

மேலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும், அல்லாஹ் வானத்திலிருந்து இறக்கும் வாழ்விற்குரிய பொருளிலும் பிறகு இதன் மூலம் பூமியை அதன் மரணத்திற்குப் பின்னர் உயிர்ப்பிப்பதிலும், காற்றுகளை மாறி மாறி வீசச் செய்வதிலும் அறிந்து கொள்ளும் சமுதாயத்தினருக்குப் பல அடையாளங்கள் உள்ளன. (45 : 6)

இந்த வசனத்தில் முஸ்லிம்களுக்கு குறிப்பாக ஒரு தூதுச் செய்தி இருக்கின்றது. ஏனென்றால், திருக்குர்ஆன் மீது நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம் என்பது முஸ்லிம்களின் வாதமாகும். எவ்வாறு ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் வருவதை நாம் பார்க்கின்றோமோ எந்த பணிகள் பகல் நேர ஒளியில் நடைபெறுகின்றதோ அவை இரவில் நடைபெறாது. இவ்வாறே ஆன்மீக உலகிலும் இரவும் பகலும் வந்து கொண்டேயிருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்பாக இருள்நிறைந்த காலக்கட்டம் இருந்தது. அவர்கள் வந்து அதனை ஒளிமயமான காலக்கட்டமாக மாற்றினார்கள். அல்லாஹ்விடமிருந்து இறுதி –ரீஅத்தைப் பெற்று இப்போது இந்த ஒளிமயமான வேதம், முழுமை பெற்ற –ரீஅத் கியாமத் நாள் வரை உள்ளங்களை ஒளிபெறச் செய்யும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். ஆனால் அத்துடன் இறைவனது விதிக்கேற்ப எனக்குப் பிறகும் இருள் நிறைந்த காலக்கட்டம் தோன்றும். ஆனால், இந்த இருள் நிறைந்த காலக்கட்டத்திலும் இந்த முழுமை பெற்ற –ரீஅத்தின் ஒளி தீபத்தின் வடிவத்தில் விளக்கின் வடிவத்தில் அங்குமிங்கும் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கும். பிறகு முஹம்மதிய மஸீஹின் வருகையால் இருள் நீங்கி மீண்டும் ஒளிமயமான காலக்கட்டம் தோன்றும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளார்கள். இதற்குப் பிறகு மரணித்துப் போன பூமியை மீண்டும் உயிர்ப்பிக்கக் கூடிய அந்த **ரிஸ்க்** இறங்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையால் மீண்டும் அந்த தண்ணீர் இறங்கியது. அதன் மூலமாக இருள்கள் அகன்றன. ஒரு கவிதையில் இதைக் குறிப்பிட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

நான் குறிப்பிட்ட காலத்தில் விண்ணிலிருந்து இறங்கியுள்ள தண்ணீராக இருக்கின்றேன். பகல் வெளிப்படுவதற்கு காரணாக இருந்த அந்த இறையொளி நானேயாவேன்.

இப்போது இந்த ஒளியையும் இந் தண்ணீரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் மூலமாக அல்லாஹ் இறக்கியுள்ளான்.

அகராதி வல்லுநர்கள் மழையையும் **ரிஸ்க்** என்று கூறியுள்ளார்கள். சூரா ஜாஸியாவின் இந்த (45:6) வசனத்தை இதற்கு சான்றாக அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஒளியை பரப்புவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தோன்றச் செய்துள்ளான். இப்போது முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் அல்லாஹ் இந்த **ரிஸ்க்** –ஐத்தான் இறக்கியுள்ளான். இதன் மூலம் உலகம் மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றின் பசி அகன்று விடும்.

ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான். **ரிஸ்கன் லிஇபாதிஹ் வஅஹ்யய்னா பிஹி பலததன் மய்தன் கதாலிகல் ஹுரூஜ்** - அடியார்களின் **ரிஸ்க்** -ற்காக நாம் மழை மூலமாக மரணித்துப்போன பகுதியை உயிர்ப்பித்தோம். இவ்வாறு அதை நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

இங்கு மழையின் உதாரணம் தரப்பட்டுள்ளது. மழை வருவதன் காரணமாக மரணித்துப்போன பூமி உயிர் பெறுகிறது. எல்லா இடங்களும் செழிப்பாக தோற்றமளிக்கும். சில நேரங்களில் வெளிப்படையாக பார்க்கும்போது பாலைவனமாக தென்படும் பகுதிகள் மழை பெய்தவுடன் எந்த அளவு செழிப்பாக ஆகிவிடுகின்றன என்றால், அவை வறண்ட பகுதிகளாக எவராலும் கருதப்படுவதில்லை. பாகிஸ்தானில் சிந்து மாகானத்தில் தர் என்ற ஒரு பகுதி இருக்கின்றது. வறண்ட காலக்கட்டத்தில் அங்கு மணல் தூசி எழும்பும். ஆனால் அங்கு மழை பெய்து விட்டால் அதே மணல் மேடுகள் செழிப்பாக தோற்றமளிக்கும். பசுமையான மலைகளாக தென்படும். இந்த செழிப்பு இந்த மண்ணில் எப்படி ஏற்பட முடியும்? என்பதை பார்த்து நாம் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றோம். எந்தப் பகுதியில் மக்களுக்கு பசியால் துன்பம் ஏற்பட்டதோ மழை பெய்ததும் அங்கு தாவரங்களும் தானியங்களும் முளைக்க ஆரம்பித்து விடுகின்றது. அதன் காரணமாக அவர்களுக்கு தாராளமாக **ரிஸ்க்** வழங்கப்படுகிறது. இப்போது எந்த மதத்தைச் சார்ந்த அறிவுள்ள மனிதனும் சிந்தனை செய்து பார்த்தால், அவரது நாவிலிருந்து இறைவனின் புகழ் அவரையும் அறியாமல் வெளிப்படும். இறைவனது **ரஸ்ஸாக்** என்ற பண்பில் அவருக்கு உறுதியான நம்பிக்கை உருவாகி விடும். ஒரு மூஃமினுக்கு இதை விட அதிகமாக இந்த உணர்வு ஏற்படும். பூமியில் செடி கொடிகள், தாவரங்கள் மழை பெய்தவுடன் வெளிப்படுவதும் அல்லது மழையைப் பொழியச் செய்வதும் ஏதாவது ஒரு அரசாங்கத்தால் நடக்கின்ற பணியா? இந்த எல்லா வி-யங்களும் ஒரு மூஃமினால் சிந்தித்துப் பார்க்க வேண்டிய வி-யங்களாக உள்ளன. இந்த அனைத்து **ரிஸ்க்** ஐயும் அல்லாஹ் தான் வழங்குகின்றான். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இவை அனைத்தையும் வழங்கியவன் இறைவன்தான் என்பதில் ஒவ்வொரு மார்க்கத்தைச் சார்ந்தவரும் ஏற்றுக் கூறினாலும் சிறிது காலம் சென்ற பிறகு அவனை அவர்கள் மறந்து விடுகின்றார்கள். எவ்வாறு மரணித்துப் போன பூமியிலிருந்து அல்லாஹ் உயிருள்ளவற்றை வெளியேற்றுகின்றானோ அவ்வாறே மனிதன் இந்த உலகிலிருந்து சென்ற பிறகும் இறைவன் அவனை உயிர்ப்பிப்பான். எனவே, மறுமையின் பக்கமும் உங்கள் கவனம் இருக்க வேண்டும். அங்கு உங்களது கணக்கு எடுக்கப்படும். வரம்பு மீறி செயல்படும் போது நபிமார்களை மறுத்து அவர்களின் மீது கொடுமையிழைக்கும்போது அது பற்றியும் உங்களிடம் கேள்வி கேட்கப்படும். மறுமையில் நல்லது நிகழ வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருந்தால் முஸ்லிம்கள் என்ற நிலையில் நல்ல **ரிஸ்க்** கிடைக்க வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருந்தால் உங்களுடன் மென்மையாக நடந்து கொள்ளப்பட வேண்டும் என நீங்கள் விரும்பினால் நீங்களும் நற்செயல்களைச் செய்ய வேண்டும். இந்த நன்மைகளே உங்களுக்கு மறுமையில் நற்பலனைத் தரும்.

அல்லாஹ் தனது கருணையின் போர்வையில் போர்த்தியவாறு அவனது திருப்தி கிடைக்கும் வழிகளில் செல்வதற்கான நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக. உண்மையை அடையாளம் காணாதவர்களுக்கும் அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. தனது திருப்தியைப் பெறும் வழிகள் தொடர்பாகவும் நன்மையின் பக்கமும் கவனமூட்டியவாறு அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

**வஃமுர் அஹ்லக பிஸ்ஸலாத்தி வஸ்தபிர் அலைஹா. லா நஸ்அலுக ரிஸ்கா. நஹ்னு நர்ஸுகுக். வல்ஆக்கிபத்து லித்தக்வா**.

தொழுது வருமாறு உம் குடும்பத்தினருக்கு வலியுறுத்திக் கூறிக் கொண்டிருப்பீராக. நீரும் அதில் எப்போதும் நிலைத்திருப்பீராக. நாம் உம்மிடம் எவ்வகையான **ரிஸ்க்** ஐயும் கேட்பதில்லை. நாமே உமக்கு

உணவு வழங்கிக் கொண்டிருக்கின்றோம். மேலும் இறையச்சம் உடையோருக்கே நல்ல முடிவு அமையும். (20:133)

அல்லாஹ் நமக்காக இறக்கியுள்ள இந்த சிறந்த ஆன்மீக **ரிஸ்க்** –லிருந்தும் பலன் பெற்றவாறு இபாதத்தின் பக்கம் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். கிலாஃபத்தின் அருளிலிருந்து பலன் பெறுவதற்கும் அல்லாஹ் தொழுகைகளைப் பேணுவதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளான். இங்கு தொழுகையுடன் குறிப்பாக இந்த வசனத்தில் **ரிஸ்க்** பற்றியும் வந்திருக்கின்றது. இந்த காலத்தில்தான் **ரிஸ்க்** ஐப் பெறுவதற்காக அல்லாஹ் அனுமதிக்காத வழிகளில் அதைப் பெறுவதற்காக முயற்சிகள் செய்யப்படுகிறது. எனவே, நல்ல முடிவும், சொர்க்கமும் ஒருவருக்கு கிடைப்பதற்கு தொழுகையைப் பேணுவதும் ஹலாலான வழியில் **ரிஸ்க்** ஐப் பெறுவதும் அவசியமானதாகும். தூய்மையான உள்ளத்துடன் தொழுகையை நிலைபெறச் செய்பவருக்கு ஹலாலான **ரிஸ்க்** கிடைப்பதற்கான உத்திரவாதத்தையும் அல்லாஹ் வழங்கியுள்ளான்.

நாம் உம்மிடம் **ரிஸ்க்** கேட்கவில்லை என அல்லாஹ் இந்த வசனத்தில் கூறியிருப்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடும் போது இறை வழியில் பொருள் தியாகம் செய்யுமாறும் அல்லாஹ்தான் கூறியுள்ளான். இங்கு உம்மிடம் எவ்வித **ரிஸ்க்** ஐயும் நாம் கேட்கவில்லை என்று அல்லாஹ் கூறுகின்றானே இதன் பொருள் என்ன? என கேள்வி எழுப்பி அதற்குப் பதிலாக உங்களிடம் பெறப்படும் சந்தாக்களையும் நீங்கள் செய்த இந்த நன்மையின் காரணமாக அதைப் பல மடங்காகப் பெருக்கித் தருவதாக அல்லாஹ் வாக்களித்துள்ளான். எந்த அளவு அதைப் பெருகச் செய்து திருப்பி வழங்குவான் என்றால், மனிதன் அதைப் பற்றி கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என அல்லாஹ் கூறுகின்றான்.

அல்லாஹ்விற்கு தேவை என்பதால் அவன் உங்களிடம் எதையும் வாங்கவில்லை. நீங்கள் செய்த நன்மையின் காரணமாக அவற்றைப் பல மடங்கு பெருகச் செய்து, உங்களுக்கு திருப்பி வழங்குவதற்காகவே அப்பொருளை உங்களிடமிருந்து வாங்குகின்றான். எந்த நற்செயல் தக்வாவுடன் தக்வாவைப் பெற்றுக் கொள்வதற்காக செய்யப்படுமோ அதன் முடிவு இவ்வுலகிலும் நன்மையாக இருக்கும். மறுமையிலும் இறைவனின் திருப்தியைப் பெற்று அவனது சொர்க்கத்தின் வாரிசாகுவதற்கான வழியாக அது அமையும்.

அல்லாஹ் நம்மை தக்வாவில் வழிநடத்தியவாறு நமது ஒவ்வொரு செயலையும் இந்த உலகிலும் மறு உலகிலும் நமக்கு நல்ல முடிவைப் பெற்றுத் தரக்கூடியதாக ஆக்குவானாக. தனது சிறந்த **ரிஸ்க்** ஐ ஒவ்வொரு நொடியும் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 06.06.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**